**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.28/2013**

2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24–ம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவா்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.07.2023 | தந்தை பெயர்: | கிருஷ்ணமூர்த்தி |
| பெயர்: | சட்டையப்பன் (PW-1 Chief continuation) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நெய்தவாசல் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 48 /2023 |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை தொடர்ச்சி : 24.07.2023.**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு முதன்மை விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

07.05.1932-ல் எனது பாட்டி ராஜம்மாள் பெயரில் ஏற்பட்ட கிரய சாசனத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யபப்படுகிறது**. 09.03.2023 தேதியிட்ட தாவா சொத்தில் வீட்டிற்கான வீட்டு வரி ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யபப்படுகிறது**. 04.07.2023 தேதியிட்ட தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு செலுத்தியதற்கான கணினி வழி நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யபப்படுகிறது**. 06.09.1949-ல் முதல் பிரதிவாதியின் தகப்பனார் சிவப்பிரகாசம் பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யபப்படுகிறது**.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.